# கணினித் திறன் பயிற்சி – இணைய-வழியில் நிரப்பும் படிவங்கள் – ‘சமூக வெற்றியாளர் திட்டம்’

*2025*

lotterywest

wacoss wa council of social service

# பயிற்றுநருக்கான குறிப்புகள்: இணைய-வழிப் படிவங்களை நிரப்பல்

- பங்குபற்றுநர்களுக்காக இந்தக் கையேடுகளை அச்சிட்டுக்கொள்ளுங்கள்:
  - இணைய-வழிப் படிவங்கள்
- இந்தப் பாடத்தை அளிக்கும் பொழுது உங்களுடைய பயன்பாட்டிற்காக இந்த ஒளித்-தகடுகளின் பிரதி ஒன்றை, குறிப்புகள் உள்ள பகுதியுடன் அச்சிட்டு வைத்துக்கொள்ளுங்கள்.
- வாசியுங்கள்:
  - இந்த ஒளித்-தகடுகளை வாசித்து அவற்றில் அடங்கியுள்ள விடயங்கள் உங்களுக்குப் பரிச்சியமானவை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்,
  - பங்குபற்றுநர்களுக்கான கையேட்டினை வாசியுங்கள்.
- உங்களுக்குக் கேள்விகள் ஏதும் இருப்பின், அமர்விற்கு முன்பாக 'எலியட்' அவர்களுடன் தொடர்புகொள்ளுங்கள் Elliot@wacoss.org.au
- காட்சிப்படுத்துவதற்கு முன்பாக இந்த ஒளித்-தகட்டினை அகற்றுங்கள்/மறைத்துவையுங்கள், மற்றும் கடைசி ஒளித்தகட்டில் அடுத்த அமர்விற்கான நேரம்/திகதியைப் புதுப்பியுங்கள்.
- இதைக் காட்சிப்படுத்துவதற்கு முன்பாக, கடைசி ஒளித்-தகட்டில் அடுத்த அமர்விற்கான நேரம் / திகதியைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.
- உங்களுடைய சமூகத்தினர் கணினிகள் அல்லது 'ஃபோன்'களைப் பாவிக்கும் படங்கள் உங்களிடம் இருந்தால் இந்தப் படங்களில் எதற்கும் பதிலாக அவற்றை நீங்கள் பாவிக்கலாம்.

# இந்த நாட்டு பூமிக்காக பூர்வ பழங்குடியினருக்கு நன்றி நவிலல்

ஆபோரிஜினிப் பூர்வகுடி மக்களது நிலத்தில் நாம் வாழ்கிறோம் என்பதை நாமறிவோம். இந்த நிலங்களைச் சேர்ந்த ஆபொரிஜினி மக்களுக்கு நாங்கள் மதிப்பு-மரியாதை செலுத்துகிறோம். ஆபொரிஜினிப் பூர்வகுடி மக்கள் பல ஆண்டுகளாக இந்த நிலத்தில் பல ஆண்டுகளாக வாழ்ந்துவருகின்றனர்.

ஆபொரிஜினிப் பூர்வகுடிகள் அனைத்தொர்ரையும் அவர்களது மூத்தொர்களையும் நாங்கள் மதித்து அவர்களுக்கு மரியாதை செலுத்துகிறோம்.

அவர்களது கதைகளிலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள இயலுமானது ஏராளமாகும்.

இந்த பூமி எப்போதுமே ஆபொரிஜினிப் பூர்வகுடியினருடையதாகவே இருந்துவந்திருக்கிறது, இனியும் அவ்வாறே நீடிக்கும்.

# இணைய-வழிப் படிவங்கள்

## WA Digital Inclusion Project

# அமர்வின் மேலோட்டம்

இந்த அமர்வின் இறுதியில் உங்களால் பின் வருவனவற்றை விளங்கிக்கொள்ள இயலும்:

- இணைய-வழிப் படிவங்கள் என்றால் என்ன,
- இணைய-வழிப் படிவம் ஒன்றை நீங்கள் எங்கு காணலாம், மற்றும்
- இணைய-வழிப் படிவம் ஒன்றை நிரப்புவது எப்படி.

# அறிமுகங்கள்

- குழுவினருக்கு உங்களை அறிமுகப்படுத்திக்கொள்ளுங்கள்
- இணைய-வழிப் படிவங்களைப் பற்றி உங்களுக்குள்ள அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள் – அவற்றை நீங்கள் எங்கு பார்த்திருக்கிறீர்கள், மற்றும் அவற்றை நீங்கள் எதற்காகப் பாவித்திருக்கிறீர்கள்?




# இணைய-வழிப் படிவங்கள்



- காகிதப் படிவங்களின் மின்னணு வடிவங்கள்
- சேவைகளுக்காக விண்ணப்பிக்க, அல்லது சேவைகளைப் பாவிக்க
- இணையம் மூலமாகப் பொருட்கள் வாங்க
- மதிப்பாய்வுகளைப் பூர்த்தி செய்ய
- சந்தா-செலுத்தல்களுக்கான தகவல்களைக் கொடுக்க

# இணைய-வழிப் படிவங்களில் உள்ள பகுதிகள்





எழுத்துரைப் பெட்டிகள் (டெக்ஸ்ட்-பாக்ஸெஸ்):

For information like names, addresses etc.


# ‘ரேடியோ பொத்தான்’கள் மற்றும் ‘குறியீட்டுப் பெட்டி’கள்

## ரேடியோ பொத்தான்கள்





அட்டவணையில் உள்ளவற்றில் ஒன்றை மட்டும் உங்களால் தெரிவு செய்ய இயலும் பொழுது

## குறியீட்டுப் பெட்டிகள்




ஒன்றிற்கும் மேற்பட்ட தெரிவுகளை உங்களால் தேர்ந்தெடுக்க இயலும் பொழுது

# ‘கீழ்-விழு அட்டவணை’கள் (Drop-down lists)




‘கீழ்-விழு’ அட்டவணை ஒன்றிலிருந்து ஒரு விடயத்தை மட்டும்
உங்களால் தெரிவு செய்ய இயலும் பொழுது

# உபயோகமான குறிப்புகள்



- ஆஸ்டெரிக்ஸ் (*) = இந்த அடையாளம் உள்ள இடத்தை நிரப்பவேண்டியது கட்டாயம்
- தானாகவே தோன்றி தனாகவே நிரம்பும் எழுத்துரைகள்
- சில படிவங்களுக்கு கால வரையறை இருக்கும்
- ஆவணங்களை வலையேற்றம் செய்தல்

# இறுதிப்படுத்துதல் மற்றும் சமர்ப்பித்தல்

- **சமர்ப்பியுங்கள் மற்றும் உறுதிசெய்யுங்கள்:** படிவத்தை நிரப்பி முடித்த பிறகு **‘சமர்ப்பி’ (Submit)** மற்றும் **‘உறுதிசெய்’ (Confirm)** ஆகிய பொத்தான்களின் மீது சொடுக்க மறவாதீர்கள்.

- **பிரதி ஒன்றை சேமித்தல்:** உங்களுடைய பதிவுகளுக்காக, பிரதி ஒன்றை அச்சிட, அல்லது சேமிக்க சில படிவங்கள் உங்களை அனுமதிக்கும்.

- **திருத்தங்கள்:** நீங்கள் தவறு ஏதும் செய்தால், பல படிவங்கள் அதை ஒளியூட்டிக் காண்பித்து, சமர்ப்பிப்பதற்கு முன்பாக அந்த தவறைத் திருத்துமாறு உங்களைக் கேட்கும்.

- **‘பின்–செல்’ பொத்தான் (‘பேக்-பட்டன்)** முந்தைய பக்கம் ஒன்றிற்குச் செல்ல, படிவத்தின் ‘பேக்–பட்டன்’–ஐப் பாவியுங்கள், உங்களுடைய ‘வலையுலாவி’(‘ப்ரவுசர்’)யின் ‘பேக்–பட்டன்’–ஐ அல்ல.



# உபயோகமான மூலவளங்கள்

இணைய-வழிப் படிவங்களை நிரப்புவது எப்பாடி என்பதைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு - கையேட்டினைப் பாருங்கள், அல்லது பின் வரும் வலைத்தலத்திற்குச் செல்லுங்கள்.

https://goodthingsaustralia.org/learn-resource/smith-family-online-forms/



# இந்த அமர்வு குறித்த மீள்பார்வை

கேள்விகள் ஏதும் இருக்கின்றனவா?

- இணைய-வழிப் படிவங்கள் என்றால் என்ன என்பதைப் பற்றிய புரிதல் உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறதா?
- இணைய-வழிப் படிவம் ஒன்றை உங்களால் எங்கே காண இயலும்?
- இணைய-வழிப் படிவம் ஒன்றை எவ்வாறு நிரப்புவது என்பதைப் பற்றித் தெரிந்துகொண்டீர்களா?

# நன்றி!

அடுத்த அமர்விற்கான நேரம்:

WA
# digital inclusion
project

## நன்றி

## சமூக வெற்றியாளர் திட்டம்

எழுத்துரையை உள்ளிட, சொடுக்குங்கள்

lotterywest

wacoss wa council of social service